**DEPOSITION OF WITNESS**
**(Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,ARANTHANGI**

**Calendar**

**Miscellaneous**

**Preliminary Register** CC.No.28/2011

**Sessions**

| | | | |
|---|---|---|---|
| **Deposition of witness for** | அ.சா,3 | **Caste** | |
| **NAME** | திரு. சிவக்குமார், காவல் உதவி ஆய்வாளர் | **Calling** | |
| **Father's Name** | | **Religion** | |
| **Village** | | **Age** | |
| **Taluk** | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act II of 1973 of the day of 10-11-2021

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது அறந்தாங்கி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். அறந்தாங்கி காவல் நிலையக் குற்ற எண். 231/2007 , வழக்கின் நிலைய நாட்குறிப்பு மற்றும் கோப்புகள் அடிப்படையில் வழக்கு விபரங்கள் எனக்கு நன்கு தெரியும். கடந்த 15-07-2007 அன்று அறந்தாங்கி காவல் நிலையத்தில் அப்போதைய தலைமைக் காவலர் சுந்தர் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்த போது அறந்தாங்கி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் அங்கு சிகிச்சையில் இருந்த இளையராஜா என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று அதன் தன்மைக்கு ஏற்ப அன்றைய தினம் 19.15 மணியளவில் அறந்தாங்கி காவல் நிலையக் குற்ற எண். 231/2007 இதச பிரிவுகள் 294(b), 323, 506(1) ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 . ஆகும். தொடர்ச்சியாக வழக்கை உதவி ஆய்வாளர் ஜெயக்குமார் அவர்கள் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றைய தினம் 15 –07-2007 அன்ற 20.30 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் மோகன் ராஜ் மற்றும் பரமசிவம் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அந்தப் பார்வை மகசர் அ.சா.ஆ.3. ஆகும். மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 4 ஆகும். மேலும் உதவி ஆய்வாளர் ஜெயக்குமார் அவர்கள் சாட்சிகள் இளையராஜா, முருகேசன், சுந்தர்ராஜ், மோகன் ராஜ், பரமசிவம், ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அன்றையதினம் 15-07-2007 அ்ன்று 21.15 மணியளவில் எதிரிகள் சரவணன், மற்றும் கார்த்திக்கை அப்போதைய விசாரணை அதிகாரி கைது செய்து நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தியுள்ளார். காயம்பட்டநபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் திலகவதி, சேகர், ஆகியோர்களை விசாரித்து

வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றுள்ளார். காயச்சான்று அ.சா.ஆ. 5 ஆகும். காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என மருத்துவர் கருத்துரைச்சான்று வழங்கியதன் பேரில் அப்போதைய விசாரணை அதிகாரி சட்டப்பிரிவுகளை இதச 294(b),323, 325, 506(1) என மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாற்றுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். அந்த சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை அ.,சா.ஆ.6 ஆகும். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமைக் காவலர் சுந்தர் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். தொடர்ச்சியாக புலன் விசாரணை முடித்து உதவி ஆய்வாளர் ஜெயக்குமார் அவர்கள் எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

குறுக்கு விசாரணை

எதிரிகள் மீது அ.சா.1. கொடுத்த பொய்யான புகாரை முறையாக விசாரிக்காமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் சம்பவத்திற்கும் தொடர்பு இல்லையென்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் மீது பொய்யாக இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.